**முகம்**
**(மாத இதழ்)**

திருவள்ளுவர் ஆண்டு 2053-54
மார்கழி - 17 (01.01.2023)

நிறுவனர்
**மாமணி**

ஆசிரியர்:
**முனைவர் இளமாறன்**
94442 64111

044 - 4557 9006

தனி இதழ் ரூ.15/-
ஆண்டுக் கட்டணம் ரூ.150/-
10 ஆண்டுக்கு ரூ.1000/-

**விளம்பரக் கட்டணம்**
முழுப்பக்கம்
உள்ளே ரூ.1000/-
வெளியே ரூ.2000/-

**முகம்** என்னும் பெயரில்
காசோலை அனுப்பலாம்

"**முகம்**" தொடர்பு முகவரி:
எண்.26, பாரதிதாசன் தெரு,
திருநகர், சாபர்கான்பேட்டை
சென்னை- 600 083.




மெய்ப்பொருள் காண்பது அறிவு
-குறள்


இணையதளம்: http://www.mugamidhazh.net.in மின்னஞ்சல்: mugam.idhazh@gmail.com


# வெளிச்சப் பாதையில் பயணிப்போம்!

**பு**த்தாண்டு பிறந்திருக்கிறது. புத்துணர்வும் புத்தெழுச்சியும் பெற்றுப் புதுப்பாதையில் இனி நாம் பயணிப்போம். கடந்த கால கசடுகளை நீக்கி எதிர்கால எழுச்சிக்கு வழிவகுப்போம்!

இரசியா - உக்ரைன் போரால் ஏற்பட்ட இழப்புகளும் அதன் தொடர்ச்சியாக ஏற்படும் பொருளாதார நெருக்கடியும் உலக மக்களை இன்றளவும் பாதித்துக் கொண்டிருக்கிறது. அறிவியல் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டிருக்கும் நாம், அறிவு வளர்ச்சியின் உச்சத்தைத் தொடவில்லை என்றே தோன்றுகிறது. இன்றைய அணு ஆயுத வளர்ச்சியில் போர் மூண்டால் உலகமே அழியும் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. 'கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்' என்ற பாவேந்தரின் சிந்தனையை உலக நாடுகளுக்கு உணர்த்த வேண்டியுள்ளது. 'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற பொதுநலச் சிந்தனை வளர வேண்டும்.

சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், அரசியல் பெயரால் மக்கள் பிரித்தாளப்பட்டு வேற்றுமையை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். இது மனிதப்

பண்பாடற்ற செயல் என்று அந்த வேற்றுமையை விதைப்போருக்கு எட்டவில்லை.

கடந்த மூன்றாண்டுகளாக நம்மமை ஆட்டிப்படைத்த கொரானா பெருந்தொற்று, சாதி பார்த்து, மதம் பார்த்து, அரசியல் பார்த்து, நாடு பார்த்துப் பரவவில்லை. உலக மக்கள் அனைவரின் மீதும் பாய்ந்தது. அந்தக் கொரோனா தொற்றிலிருந்து நம்மை மீட்ட மருத்துவர்கள், செவிலியர்கள், களப்பணியாளர்கள் எவ்வித வேற்றுமையும் பாராமல்தான் நமக்கு உதவினர்; நம் உயிரை மீட்டெடுத்துத் தந்தனர். இதை உணர்ந்தாலே நமக்குள் இருக்கும் வேற்றுமை, ஏற்றத்தாழ்வு, பாகுபாடுகள், பகை உணர்வு ஒழிந்துவிடும். குறிப்பாக மதத்தின் பெயரால் அரசியல் நடத்துவோர் இதனை அறிய வேண்டும். கொரானா காலத்தில் கடவுள்களே காணாமல் போய் விட்டதை உணர வேண்டும்.

தற்போது மீண்டும் புதிய வகை கொரேனா சீனா, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, தென் கொரியா ஆகிய நாடுகளில் பரவி வருகிறது. இந்தியாவிலும் குஜராத், ஒடிசா மாநிலங்களில் பரவி உயிர்ப்பலி வாங்கியுள்ளது. ஒன்றிய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. தமிழக அரசு களப்பணிகளில் இறங்கியுள்ளது. கவனமாக இருப்பது நம் கடமை. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்றனர் நம் முன்னோர்.

'அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு! விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!' என்ற பாவேந்தரின் வழியில், 'மக்கள் அனைவரும் ஒன்றெனும் நோக்கில் பயணிப்போம்; புத்துலகைப் படைப்போம்' என்ற உறுதியேற்றுப் பிறந்திருக்கும் புத்தாண்டை வரவேற்போம்! வெளிச்ச வாழ்வில் வாழ்வோம்!

**- ஆசிரியர் (24.12.2022)**



**அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துகள்!**